2016 ஆகஸ்ட் 9]

அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேல்மொணவூரில் சங்கத்தின் சார்பில் இடம் வாங்கி வைத்துள்ளார்கள். வேலூர், மண்டித் தெருவில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அணைக்கட்டு தொகுதிக்குட்பட்ட மேல்மொணவூரில் மேலும் ஒரு நவதானிய சேமிப்புக் கிடங்கை அமைத்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் வேலூர் மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், காட்பாடி, இராணிப்பேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆற்காடு, நாட்ராம்பள்ளி மற்றும் அணைக்கட்டு ஆகிய தொகுதிகளில் 36,000 மெடன் கொள்ளளவில் 34 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இது தமிழக வரலாற்றில், வேலூர் மாவட்டத்தினுடைய வரலாற்றில், ஒரு மைல் கல் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, தேவையின் அடிப்படையில் எங்கெல்லாம் கிடங்குகள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் கிடங்குகள் கட்டித்தர வேண்டும் என்பது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலையாய உத்தரவு என்பதையும், தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வு செய்யப்படும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

41—

விடுகள்

***2097—திரு. ஐ.எஸ். இன்பதுரை:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராதாபுரம் தொகுதி, வள்ளியூர் ஒன்றியம், ஒட்டக்காரன் குடியிருப்பு, வள்ளியம்மாள்புரம் ஆகிய பகுதிகளிலுள்ள நெசவாளர்களுக்கு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் அறிவாற்றலே, பொன்மனச் செம்மலின் அருட்குணமே, பாரதம் கண்ட பகுத்தறிவு போர்வாளே, கழகம் காக்கும் காவல் தெய்வமே, தொண்டர்களின் ஒளிவிளக்கே (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினத்தின் குல விளக்கே எங்கள் அம்மா, என் தாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களை வணங்கி விடையைத் துவங்குகிறேன்.*

2016-2017 ஆம் ஆண்டிற்கான பசுமை வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ், முதலமைச்சர் பசுமை வீடுகள் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான பரிசீலனைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்வது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐஎஸ். இன்பதுரை அவர்கள்.*

திரு. ஐ.எஸ். இன்பதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவை நனவாக்குகிற ஒரே* original *அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் யாருக்கும் எந்த சந்தேகமும் இல்லை. எவ்வாறு என்றால், படி அரிசி ஒரு*

2016 ஆகஸ்ட் 9]

ரூபாய்க்கு என்றார் பேரறிஞர் அண்ணா. அது அவருடைய இலட்சியம். நம்முடைய மாதரசி அதற்கும் ஒரு படி மேலே சென்று, 20 கிலோ அரிசியை விலையில்லாமல் தந்து கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஒழுகாத வீடு, கிழியாத ஆடை இதுவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிரகடனம்தான். அந்த வகையிலே, பொங்கல் பண்டிகைக்கு வேட்டி, சேலைகளை அளவில்லாமல் ஆனந்தமாய்த் தந்து கொண்டிருப்பதும் அம்மாவினுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) கிழியாத ஆடை. ஒழுகாத வீடு கொடுத்து இன்றைக்கு ஓலைக் குடிசைகளே இல்லை என்ற வகையிலே, பசுமை வீடுகளை பாங்காய்த் தந்து கொண்டிருப்பதும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் அண்ணாவின் கனவை நனவாக்குகிற original அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்று சொன்னேன். அந்த வகையிலே, நமக்கெல்லாம் கிழியாத ஆடைகளைத் தந்து கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு, அதாவது எனது இராதாபுரம் தொகுதிக்குட்பட்ட ஒட்டக்காரன் குடியிருப்பு, வள்ளியம்மாள்புரம் பகுதியிலே இருக்கிற நெசவாளர்களுக்கு வீடு கட்டித் தரப்படுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் சொன்னதைச் செய்கிற அரசு என்கிற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) இதை நிச்சயம் நிறைவேற்றித் தருவார்கள் என்பதையும் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் நான்கையும் உள்ளடக்கி அகிலம் போற்றும் அற்புத ஆட்சி படைத்து வரும் தாயே, அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி மகிழ்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பூர் மாவட்டம், செட்டிபாளையம் கிராமம், அங்கேரிபாளையத்திலே எளிய குடும்பத்திலே பிறந்த அடிமட்டத் தொண்டனான எனக்கு, ஒன்றிய எம்.ஜி.ஆர். இளைஞர் அணி இணைச் செயலாளராகவும், மாவட்ட பனியன் அண்ணா தொழிற்சங்க துணைச் செயலாளராகவும், ஒன்றியக் கழகத்தினுடைய அவைத் தலைவராகவும், கடந்த 12 ஆண்டுகளாக

ஒன்றிய கழகச் செயலாளராகவும் கழகப் பொறுப்புகளை தாயுள்ளத்துடன் வழங்கி, ஒன்றியக் குழு உறுப்பினர், மாநகராட்சியினுடைய மாமன்ற உறுப்பினர், மாவட்டத் திட்டக் குழு உறுப்பினர் போன்ற பதவிகளில் பணியாற்றும் நல்வாய்ப்பினையும் வழங்கி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியிலே கழக வேட்பாளராகப் போட்டியிடும் பொன்னான வாய்ப்பினை வழங்கி, வெற்றி பெற வைத்து வரலாறு போற்றும் தமிழக சட்டமன்றத்தில் எனது உரையை வழங்குகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது சார்பிலும், எனது குடும்பத்தினர் சார்பிலும் மீண்டும், மீண்டும் நன்றி மலர்களைப் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன். என்னை, சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகரம் பனியன் தொழிலுக்குப் பெயர் பெற்ற நகரம். அதேபோல, கைத்தறி நெசவாளர்களும் அதிகம் நிறைந்த பகுதி. திருப்பூர் வடக்கு சட்டமன்றத் தொகுதியில், கைத்தறி நெசவாளர்களுக்கு சூரிய எரிசக்தி மின் விளக்குகளுடன்கூடிய 507 அம்மா பசுமை வீடுகள், ஒரே இடத்திலே கட்டப்பட்டு, நெசவாளர்கள் மகிழ்ச்சியுடன் குடியிருந்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தொகுதியானது, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும், நெசவாளர்களும் நிறைந்த பகுதி. 6 ஆயிரம் பேர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாக உள்ளனர். 40 ஆயிரம் கைத்தறித் தொழிலாளர்கள் உள்ளனர். கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமை அளித்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையிலே திருப்பூர் மாநகரிலே மெகா கைத்தறி குழுமம் அமைக்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

2016 ஆகஸ்ட் 9]

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, திருப்பூர் மாவட்டம், வள்ளிபுரம் கிராமத்தில் 507 பசுமை வீடுகளை ஒரே இடத்தில் கட்டி, ஒரு புதிய நகராக உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து வசதிகளும், அதாவது சாலை வசதிகள், குடிநீர் வசதி, கழிவு நீர் சுத்திகரிப்பு வசதிகள், அவர்களின் குழந்தைகளுக்குத் தேவையான பள்ளிக்கூட வசதி, பேருந்து நிறுத்த வசதி ஆகிய அனைத்தையும் அங்கே ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தப் பகுதி மக்கள் சிறப்பாக வாழ்வதற்கான வழிவகைகளை வகுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், திருப்பூரில் ஏற்கெனவே தேவையான அளவிற்கு பூங்காக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேவையான அளவிற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. திருப்பூரைப் பொறுத்தவரை, 23 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்றுமதியை செய்யக்கூடிய அளவிற்கு வசதிகளை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்து கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 18 சாயப் பட்டறைகள் அங்கே துவக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு வட்டியில்லாக் கடன், மானியம் அனைத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். மீதமிருக்கிற வங்கிக் கடனையும் மத்திய அரசு கொடுக்க வேண்டுமென, பாரதப் பிரதமரை மாண்புமிகு அம்மா அவர்கள் சந்தித்தபோது, கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே, அவர்களுடைய நலனில் என்றைக்கும் அக்கறையுடன் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு போதுமான வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறது என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.